வெறும்பேச்சு அல்ல
பிரின்சிபில் பிக்சர்ஸ்
தயாரிப்பு
டைரக்ஷன்
ஜோஸப் பள்ளிப்பாட்

வெறும் பேச்சு அல்ல

டைரக்ஷன் :

ஜோசப் பள்ளிபாட்

ஸ்டுடியோ :

நெப்டியூன், சென்னை

வெறும் பேச்சு அல்ல

கதை	...	பிரின்சிபிள் பிக்சர்ஸ் கதையிலாகா
வசனம்	...	A. K. வேலன் & K. பரமானந்தம்
பாடல்கள்	...	மருதகாசி தஞ்சை ராமையதாஸ் V. A. கோபாலன்
பின்னணி	...	ஜிக்கி ராதா ஜெயலெட்சுமி U. R. ஜீவரெத்தினம் A. M. ராஜா சீர்காழி கோவிந்தராஜன் செல்ல முத்து C. கிருஷ்ணன்
சங்கீதம்	...	C. N. பாண்டுரங்கன் & பார்டி
நடனங்கள்	...	சோஹன்லால் வேம்பட்டி சத்யம் ஹீராலால்

நடிகர்கள் — நடிகைகள்

T. S. பாலையா	...	துரை & மதி
மிஸ்டர் மைசூர் (M.R. சுதர்சன்)		பிரதாப்
பூபதி நந்தாராம்	...	பாண்டியன்
M. N. கிருஷ்ணன்	...	சத்யம்
K. துரைசாமி	...	டாக்டர் மார்த்தாண்டன்
ஸ்டண்ட் சோமு	...	சிங்கம்
பிரண்டு ராமசாமி	...	சுந்தர்
குமாரி பத்மினி	...	இந்திரா
,, ராகினி	...	மரகதம்
,, வரலக்ஷ்மி	...	மஞ்சுளா

மற்றும்

S. R. கமலம், M. D. கிருஷ்ணுபாய், ரெத்தினம் முதலியோர்

ஒளி	...	P. ராமசாமி
		V. G. நாயர்
ஒலி	...	A. கோவிந்தஸ்வாமி
		S. விஸ்வநாதன்
அரங்க நிர்மாணம்	...	C. ராமராஜு
		S. ரங்கஸ்வாமி
		V. S. ராவ்
ஆடை அலங்காரம்	...	M. G. நாயுடு
மேகப்	...	ராமச்சந்திரன்
		நவநீதம்
		தனகோடி
எடிடிங்	...	K. கோவிந்தசாமி
ஸ்டில்ஸ்	...	R. N. நாகராஜ ராவ்
ஸ்டுடியோ நிர்வாகம்	...	V. N. நாயுடு
புரொடக்ஷன் நிர்வாகம்		M. S. மூர்த்தி

உதவியாளர்கள்

ஒளி	...	P. தத்தாத்ரேயுலு
		K. S மணி
ஒலி	...	G. பாஸ்கர்
		K. K. வேலாயுதம்
எடிடிங்	...	M. ஜகந்நாதன்
மேகப்	...	R. பத்மநாபன்
		A. V. சந்தானகிருஷ்ணன்
ஸ்டுடியோ	...	நெப்டியூன்—சென்னை.

டைரக்ஷன் :

ஜோசப் பள்ளிபாட்

Recorded on R. C. A. Sound System.

கதை சுருக்கம்

மரகதம்! காட்டிலே வளர்ந்த கவரிமான். கள்ளங் கபடு தெரியாத வெள்ளை மனம் படைத்தவள். உலகம் தெரியாத அந்தப்பேதையின் உள்ளத்திலே, ஆயிரம் ஆசைகளைத் தூண்டிவிட்டான். அந்தச் சண்டாளன். இன்பக்கனவுகள் பல கண்டாள் கற்பனைக்கோட்டைகள் அவள் கருத்திலே வளர்ந்தன!

நான் ஆடுவேன்! ஆனந்தத்தின் எல்லைக்கு அவரோடு ஓடுவேன்!! இன்பவானில் இறக்கையின்றி பறப்பேன்!!! என்மகனை, எதிர் கால ஜமீந்தாரனை தங்கத்தொட்டிலிலே இட்டுத்தாலாட்டுவேன். எவ்வளவு பெரிய ஆசைகள்! எவ்வளவு தீவீரமான நம்பிக்கை!! அனைத்தையும் தூள் தூளாக்கிவிட்டான் அந்த மாபாவி மகளை வாழ வைப்பதற்காக மன்றாடிய மரகதத்தின் தந்தைக்கு கொடியவன் கொடுத்த பதில்? துப்பாக்கி குண்டு! அப்பப்பா! அந்த உபகாரியின் உயிர் துடி துடித்து ஓய்ந்துவிட்டது.

அந்தவேதனை, மரகதத்தை வெறிகொள்ளவைத்தது அவள் உள்ளம் எரிமலை ஆயிற்று. அவள் கண்களில் புனல் வரண்டது, கனல் கொப்பளித்தது சீறும் சிறுத்தையானாள், கற்புக்கு கற்பு—ரத்தத்திற்கு ரத்தம்—பழிக்கு பழி...தன் வயற்றிலே வளரும் மகனைக்கொண்டு வஞ்சம் தீர்ப்பதாக அச்சண்டாளன் முன்னிலையில் சபதம் கூறினாள்.

இடையிலே வருடங்கள் 26 உருண்டோடின.

அந்த வீர மொழிகள் வெறும் பேச்சாகவில்லை. அந்த உணர்ச்சியின் முழக்கமாக வைரத்தோடு வளர்ந்தான், மரகதத்தின் மகன்!

தன் தாயின் வாழ்வை தரைமட்டமாக்கிய மத யானையை வெல்லும் வேங்கையாக மாறினன் வேல்விழி யாள் ஒருத்தி பணயமாகக்கிடைத்தாள். அவளை வைத்து ஆடிய சதுரங்கத்தில் வெற்றிமேல் வெற்றி வீரமகனுக்கு! பொல்லாதவன் வாழ்விலே புயல் புகுந்து விட்டது. அந்தச்சண்டாளன் வளர்த்த மகள் உருமாறி வந்த பகைவனின் உயிர்க்காதலியானுள்! பகைவன் என்று வளைத்துப்பிடிக்க படைகொண்டு சென்றுன்!! பிடிபட்டது யார்? மரகதத்தின் கல்லரைமுன் துரோகம் தோற்றது. சண்டாளன் சரியான பாடம் கற்றுன். மக்களின் மன அரங்கிலே எதிரொலித்துக்கொண்டிருக் கும் "சகுந்தலை துஷ்யந்தன்" காவியத்தை நினைவு படுத்தும் கற்பனைச்சித்திரம்தான் **வெறும் பேச்சு அல்ல!** அவ்வளவும் நிகழ்ச்சிகளின் பின்னல்! உணர்ச்சி கோர்வை!! பழி-பாசம். இவற்றில் வெற்றி எதற்கு? விடை வெள்ளித்திரையில்!

வணக்கம்

மரகதம்

(இயற்றியது: தஞ்சை ராமயதாஸ்)

தாருல தாரு என்ன தாரு—இந்தப் பெரிய ஜமீன் தாரு
பெரிய ஜமீன் தாரு
பேருல பேரு—அந்தப்பேருல பேரு
பேர்போன பேரு பாண்டியனென்பாரு—இவர் பேர்
பாண்டியனென் பாரு (தாருல)

போகப்போகப் புரிஞ்சுக்குவாரு
புதுமையான பெரியோரு
இளமையான ஜமீந்தாரு—இவர் (தாருல)

பரலோகம் இந்த ஜமீன் தாரென
ஏமாந்துபோனேன் நான்
கோமாளியானேனே—இவர் (தாருல)

ஐய்யோ பாவம் அப்பாவி மனுஷன்
ஆந்தைபோல முழிச்சாரு—இந்த
சத்தங்கேட்டு மிரண்டாரு—இவர் (தாருல)

சிங்கம் கரடி சிறுத்தை வேங்கைபுலி
செந்நாய் ஓநாய் சீறும் முள்ளம் பன்றி
பங்கரையான காண்டா மிருகம்

பதுங்கி பாய்ந்திடும் மிருகங்கள் யாவையும்
பந்துபோல விளையாடும் மலைஜாதி நாங்க
பந்துபோல விளையாடும் மலைஜாதி நாங்க
—ஆமாங்க—இவர் (தாருல)

மஞ்சுளா

இயற்றியது V. A. கோபாலன்.

நாட்டின் பெருமை உயர நடந்திடுவோம்—தமிழ்
நாட்டிற்கு ஈடில்லை என்று சொல்லிடவே (நாட்டின்)
நாடாளும் அறிஞர் உருவாக்கும் வழிகள்
நலமாக முடிந்தே நம்புகழ் ஓங்கவே
வெறும் பேச்சு பேசாமலே—போலி
வேஷத்தில் திரியாமலே
கருத்துள்ள பலநூல்களைக் கேலிசெய்து
குப்பை யெனத்தள்ளாமலே
பெரியோர்கள் பொன்சரிதம்—உயர்
வழிகாட்டும் பாதையிலே
பணிவோடு முன்னேறித் தமிழ்ப்
பண்போடு உறவாடியே
பாரதி வழியில் விவேகம்
காந்திய வழியினில் தியாகம்
கட்டபொம்மன் வழிகாட்டியவீரம்
கவிகள் கலைகள் மலிந்த
கருணைக்கிடமாம் செந்தமிழ் (நாட்டின்)

பிரதாபன் & மஞ்சுளா

(இயற்றியது V. A. கோபாலன்)

பிரதாபன்: மஞ்சுளா

மஞ்சுளா: பிரதாபா

பிரதாப்: மெய்க்காதல் வானில் வீசும் ஜோதியே —மஞ்சுளா

மஞ்சுளா: அன்பே ஆருயிரே—இதயப்பிரதாபா
மெய்க்காதல் வானில் வீசும் ஜோதியே

பிரதாப்: ஆசை அமுதுறும் அழகான மயில் நான்
அறியாமல் அலைமோதுதே—என்மனம்
அறியாமல் அலைமோதுதே

மஞ்சுளா: எந்தன் தவறே இல்லை—கண்கள் செய்யும் தொல்லை
என்று அறிந்தோர்கள் சொல்வாரே
அதுவே புகழும் பெருமை
மெய்க்காதல் வானில் வீசும் ஜோதியே

பிரதாப்: திகட்டாத உன்எழில் வதனமே—கலை
வளர்க்கும் அமுதமே

மஞ்சுளா: தினகரன் ஒளி வீசிடும் தீரனே சுகுமாரனே

பிரதாப்: நமக்கிணைஏது?

மஞ்சுளா: இணைபிரியாது

இருவரும்: மேதினியில் ஒருயிராய்
பூவும் மணம் போல்
காதலெனும் சோலையிலே
ஆடிப்பாடுவோம்

மதியின் கூட்டத்தார்

(இயற்றியது V. A. கோபாலன்)

அந்தரத்தை வில்லாக்கும் ஆண் சிங்கக் கூட்டத்திலே
நெஞ்சாரப் பொய் சொல்லும் வஞ்சகர்க்கே இடமில்லே
லாலல்லல்லா லல்லல்லா லாலல்லல்லா
லாலல்லல்லா லல்லல்லா லாலல்லல்லா
காக்காபிடிக்கமாட்டோம் கைகட்டி நிற்கமாட்டோம்
கன்னு பின்னு பேச்சுப்பேசி கலேஞ்சு போகமாட்டோம்
(காக்கா)

கடமை மாறுமலே—உடமை போகாமலே
கருத்தோடு எந்நாளும் வாழுவோம்—நாங்க
கருத்தோடு எந்நாளும் வாழுவோம் (காக்கா)

கன்னியர்கள் மனங்குமுற கலங்கவிடமாட்டோம்
அநியாயம் செய்து நாங்க அடுத்துக்கெடுக்கமாட்டோம்
அடுத்துக்கெடுக்கமாட்டோம் (காக்கா)

காட்டிக்கொடுத்துக் கைவிடமாட்டோம்—தாலி
கட்டினவன் மனசுநோக நடந்திடமாட்டோம்
காட்டிக்கொடுத்துக் கைவிடமாட்டோம்—தாலி
கட்டினவன் மனசுநோக நடந்திடமாட்டோம் (காக்கா)

மஞ்சுளா

(இயற்றியது V. A. கோபாலன்)

நிதி இழந்தாலும் நீ மதி இழக்காதே—நவ
நித்தியமாம் பொருளை நீ மறக்காதே (நிதி)
மேதினியில் பெண்கள் தாங்கிடும் ரூபம்
மதித்திட முடியாத அஹிம்சையின் தியாகம் (நிதி)
கற்பெனும் தெய்வீகப் புனிதத்தினுலே
கயவர்கள் அழிந்திடுவார் கவலையுருதே
உன் மனக்கோயில் கொண்ட உத்தமன் வந்திடுவார்
உயிரை இழந்தபின் வாழ்வுனக்கேது, (நிதி)

இந்திரா & துரை

(இயற்றியது A. மருதகாசி)

இந்திரா: மழை மேகம் காணாமல் மயிலாடுமா...மாலை
இளந்தென்றல் வீசாமல் குயில் பாடுமா?

துரை: புரியாத புதிர் போடும் பொற்பாவையே—
வாழ்க்கைப்
பூங்காவில் மெய்க்காதல் மணம் வீசுமா
காதல் மணம் வீசுமா!

இந்திரா: அன்பு மொழி பேசும் விழிகண்டும் சந்தேகமா
துரையே—சந்தேகமா

துரை: இன்பவழிகாட்டும் மொழி கேட்க சந்தோஷமே
ஆஹா சந்தோஷமே

இந்திரா: பொங்கும் அலைபாடும்
பொன்னி நதிக்கரையோரம்

துரை: கங்கை நதிதீரம்
கண்கவரும் காஷ்மீரம்

இந்திரா: எங்கும் தேன் நிலவின்
இனிமை காணச்சென்றிடுவோம்

இருவரும்: காவியமாய் விளங்கும் இன்பக்காதலே-அதன்
ஓவியமாய் திகழ்ந்திடுவோம் உலகிலே
இந்த உலகிலே இன்ப உலகிலே

இந்திரா

இயற்றியது V. A. கோபாலன்

கள்ளனை நீ கண்டதுண்டோ சொல்லடி—எந்தன்
உள்ளமதைக் கொள்ளை கொண்டான் பாரடி—ஆசைக்
(கள்ளனை)

வழியில் என்னுடனே வாதுகள் செய்தானே
விழியாலே மொழிபேசி வேதனை தந்தானே
எந்நாளும் ஒன்றாகவே அன்போடு வாழ்வோமென்று
என்னென்னமோ எந்தனிடம் பேசினான்—
இன்பம் தரும் அன்பில் நானும் மயங்கினேன் (கள்ளனை)

எந்தனுயிர் காதலனும் ஆணழகன் வாரானோ
இனியும் வராமலே ஏமாற்றிப் போவானோ
அழகே கம்பீரம் தவழும் சிங்காரம்
சொல்லச்சொல்ல எந்தன் உள்ளம் ஏங்குதே-ஆஹா
மெள்ள மெள்ள என் துரையைத் தேடுதே (கள்ளனை)

சத்யம் & சுந்தர்

(இயற்றியது தஞ்சை ராமையதாஸ்)

சத்யம் : காப்பிக்குப் பொருத்தம் ஸ்டவ்வு—
காதலின் அருத்தம் லவ்வு லவ்வு
ராப்பகலாக பாடு பட்டதால்—
ரப்பேட்டா கிடைச்சது மிச்சம்—முதுகிலே
ரப்பேட்டா கிடைச்சது மிச்சம்
ஒப்புத்தாளமே போட்டால்—உன்
டாப்பு எகிரிடும் அண்ணே—அண்ணே
டாப் (காப்பி)

சுந்தர் : பாண்டியன் என்ருலும் பலே பாண்டியன்
பாச்சா ஒன்றும் பலிக்காது
பல்டியடித்தாலும் பாவலாபோட்டாலும்
பட்டாசு அங்கே வெடிக்காது—உன்
பட்டாசு அங்கே வெடிக்காது (காப்பி)

சத்யம் : தவளையோடு எலி தண்ணீரில் சென்று
தவியாய் தவித்த கதையாச்சே—நீ தவியாய்
தவித்த கதையாச்சே
சபலமடையாதே கேளு மஞ்சுளா
தவறிப்போனதும் விதியாலே—அவ
தவறிப் போனதும் விதியாலே

சுந்தர் : தீராதவினைகளெல்லாம் தீர்த்துவைக்கும்
நாருயணு—உன்
தரிசனம்தான் தந்துவிட்டால்—சித்தியாகும்
வாராய் அண்ணு
ஐயாப்புள்ளே மனசு வச்சால் அதுவும்
நடந்திடும்
ஆண்டவனே மனசு வச்சால் எதுவும் நடந்திடும்
இந்த ஐயாப்புள்ளே
அஞ்சுல ஒண்ணு தொட்டுக்காட்டு அண்ணே
அவசியமா வெற்றியாகும் சொன்னேன்
நான் வரட்டுமா! வணக்கம்!! வணக்கம்!!!

இந்திரா & குழுவினர்

(இயற்றியது தஞ்சை ராமையதாஸ்)

பாராய் ரத்தபந்தம்......
ரத்தபந்தம் விடுமா—வாழ்வில்
புத்திரவாஞ்சை விடுமா
சத்தியத்தாலே சபதத்தினுலே—தர்மமே
தலை காத்ததினுலே
சகட வாழ்வுதனிலே—பாராய் ரத்தபந்தம்
(ரத்தபந்தம்)

இந்திரா: அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்—
ஆசை மகன்தான் உனக்கும் தெய்வம்
பாசம் விட்டுப்போய்விடுமா விதியால்—
என்னென்ன
பரந்த உலகில் நடக்குது ஐயா சதிதான்—
வந்தென்ன

சுந்தர்: மதியானவரும் துரையாய் மாறி—
துரையானவரும் மதியாய் மாறி—
தூண்டிபோட்டு ஒரு மீனைப்பிடிச்சார்—
பாண்டியனும் ஒரு பாடம் படிச்சார்...
ஜோடியான மாடப்புரு பாராய்-பொன்னண்ணே
சோகமெல்லாம் தீர்ந்ததடா—வாராய்
பொன்னண்ணே

இந்திரா: அன்புக்கும் வம்புக்கும் அடங்கிய உலகம்
அறியாமல்தான் நடந்தது கலகம்
அடியும் உதையும் வாங்கியது அந்தோ—
நம்பண்ணே
அலையும் துரும்பாய் துடித்ததெல்லாம் நீதானே
சொன்னேன்

இருவரும்: பத்தினி தெய்வம் வாக்கு பலித்தது
சத்திய தேவதை நேர்மை செழித்தது
விதியின் லீலை நாடகமே விளையாட்டு அல்ல
வேதவாக்கியம் உலகினிலே—
வெறும்பேச்சு அல்ல
இது வெறும் பேச்சு அல்ல
இது வெறும் பேச்சு அல்ல—ஹேய்
வெறும் பேச்சு அல்ல

எமது அடுத்த தயாரிப்பு!

அலாவுதீனும் அற்புத விளக்கும்

உயர்ந்த நடிகர்களைக் கொண்டு உன்னதமாக
வளர்ந்து வருகிறது.

டைரக்ஷன்:
ஜோசப் பள்ளிபாட்.

கதை, வசனம், பாடல்கள்:
தஞ்சை ராமையதாஸ்.

பிரின்சிபிள் பிக்சர்ஸ்

சென்னை.

கார்த்திகேயன் அச்சகம்,
11, பெருமாள் முதலி ரோட்,
ராயப்பேட்டை :: சென்னை-14.